IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# சூல் நாவலில் சிறுதெய்வ வழிபாடு

**நெறியாளர்**
**முனைவர் செ. பாலு**
இணைப்பேராசிரியர்
தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

**ம. பொற்கொடி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

**ஆய்வுச்சுருக்கம்**

மனித வாழ்வில் நடக்கும் அனைத்து செயல்களுக்கும், மனித ஆற்றலைக் கடந்த ஏதோ ஓர் சக்தி காரணமாக அமைகின்றது. இது இயற்கை என்பதாகவும் தெய்வம் என்பதாகவும் நம்மில் இருவேறுபட்ட நம்பிக்கைகள் நிலவுகின்றன. அவ்வகையில் நல்லன கூடிடவும், தீயன விலகிடவும் மக்களால் கடைபிடிக்கப்பட்டதே தெய்வ வழிபாடு ஆகும். அத்தகைய தெய்வ வழிபாடு பெருந்தெய்வ வழிபாடு, சிறு தெய்வ வழிபாடு என இருமுறைகளில் நடைபெறுகின்றன. அதில் சிறுதெய்வ வழிபாடு குறித்து சூல் நாவலின் வழிநின்று ஆய்வதே இவ்வாய்வுக்கட்டுரை ஆகும்.

**முன்னுரை**

மனிதன் பல்வேறு அச்ச உணர்வுகளின் காரணமாக தெய்வத்தை வழிபடக்கூடிய சூழல் உருவாயிற்று. அவ்வகையில் தெய்வ வழிபாடு என்பது மக்களிடையே அவசியமாகிறது. இத்தெய்வ வழிபாடானது சிறுதெய்வ வழிபாடு, பெருந்தெய்வ வழிபாடு என்ற இருநிலையிலும் திணை அடிப்படையிலும் தெய்வங்கள் பாகுபடுத்தியுள்ளது சங்க இலக்கியங்களின் வழி புலனாகிறது. இத்தெய்வ வழிபாடு இயற்கையின் சீற்றங்கள் மூலம் நிகழ்கின்ற அச்சுறுத்தலுக்கு பயந்து இயற்கையை வழிபடக் கூடிய சூழல் உருவாயிற்று. மேலும், மனிதன் தன்னை தற்காத்துக்கொள்ளவும் சமய சடங்குகளை தம் வாழ்வில் நெறிமுறைப்படுத்திக் கொண்டான். அவ்வகையில் சூல் நாவலில் சிறுதெய்வ வழிபாடு என்பது இவ்ஆய்வுத் தளமாக அமைகிறது.

**வழிபாடு பொருள் விளக்கம்**

வழிபாடு என்பதற்கு ([illegible]) என்ற ஆங்கில அகராதி விளக்கம் தருகிறது. இறைவனை அடைவதற்கு ஒரு நன்னெறியில் செல்ல பணிப்பதே வழிபாடு ஆகிறது.

வழிபாடு என்பது மதம், குலம், நாடு, இடம், குடும்பம், பழக்க வழக்கங்கள் முதலானவற்றின் அடிப்படையில் பல்வேறு வழிமுறைகளில் சங்க காலம் முதல் பின்பற்றப்படுகிறது. அவ்வகையில் மனிதர் அவரவர்கள் விருப்பப்பட்ட தெய்வங்கள் பழக்கப்பட்ட நியமநியதிகளை பின்பற்றி பூசிக்கும் முறையே வழிபாடு ஆகும்.

மக்கள் இயற்கையின் மீதான அச்சத்தின் காரணமாக வணங்க ஆரம்பித்த முறையே வழிபாடு ஆயிற்று. வழிபாட்டு முறைகளை புலவர் பெருமக்கள் தாம் இயற்றிய நூல்களான பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகிய நூல்களில் இறைவணக்கம் கையாண்டுள்ளதை காணமுடிகிறது.

இவ்வழிபாடானது சங்க கால திணைப்பகுப்பு முறையுள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை திணைப்பாகுபாட்டிற்கு ஏற்றாற்போல் மாறுபட்டு காணப்படுகிறது. இதனையே தொல்காப்பியர்,

“மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்”[௧]

என்று கூறுவதை இந்நூற்பா மூலம் அறியவருகிறது.

**சங்க இலக்கியத்தில் வழிபாடு**

சங்கச் செய்யுளான பெரும்பாணாற்றுப்படையில் அணங்கு என்னும் சொல் வழிபாட்டிற்கு உரியதாக இடம்பெற்றுள்ளது. “துணங்கையம் செல்லிக்கு அணங்கு நொடித்தாங்கு”[௨] என்ற வரியில் அணங்கு என்றும் தெய்வ வழிபடும் பழக்கத்தினைப் பற்றிக் கூறுகிறது.

மேலும் சங்க காலம் முதலே போர்களத்தில் வீரமரணம் அடைந்தவருக்கு நடுகல் வழிபாடு முறை இருந்து வருகிறது என்பதை இலக்கியங்களில் காணமுடிகிறது.

தொல்காப்பியம் இதனை,

“காட்சி காலகோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு மரபில் பெரும்படை
வாழ்த்தலென்று
இரு மூன்று மரபிற்கல்”[௩]

என்று தொல்காப்பியர் ஆறுநிலைகளில் நடுகல் வழிபாடு உள்ளதாக குறிப்பிடுவதை அறியலாம்.

திருக்குறளில் காணப்படும்,

“என்ஐமுன் நில்லன்மின் தெவ்விர் பலர்என்ஐ
முன்னின்று கல்நின் றவர்”[௪]

இக்குறளினின்று நடுகல் வழிபாட்டு பழக்கம் பழந்தமிழரிடம் இருந்ததனை அறிந்துகொள்ள இயலுகின்றது.

பழந்தமிழரின் வாழ்வியல் மற்றும் பண்பாட்டின் அரிச்சுவடியாக அமைந்துள்ள சங்க இலக்கியத்தில் வழிபாட்டு முறைகள் என்பது பல்வேறு இடங்களில் காணப்படுகின்றது. உதாரணமாக,

“வெண் நுனை அம்பின் விசையிட வீழ்ந்தோர்
என்னும் வரம்பு அரியா
உவல் இடு பதுக்கை”[௫]

“செத்தாடை பிழைய வன்கணாடவர்
அம்புபடி வீழ்ந்தோர் வம்பப்பதுக்கை”[௬]

என்று அகம் மற்றும் புறப்பாடல் வழியாக நடுகல் வழிபாடு இருந்தமையைத் தெளிய முடிகிறது.

இவ்வாறு நம் தமிழ் இலக்கியங்கள் கூறும் வழிபாட்டு முறைகளை ஆய்வறிஞர்கள் பெருந்தெய்வ வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு என்று இருவகைகளாகப் பிரிக்கின்றனர்.

**பெருந்தெய்வ வழிபாடு**

"மூவகை ஆரெயில் ஓர்அழல் அம்பின் முளிய
மாதிரம் அழல எய்து அமரர் வேள்விப்
பாகம் உண்ட பைங்கண் பார்ப்பான்"[௭]

இவ்வழிகளில் சிவப்பெருமான் தன் சிரிப்பினில் அரக்கனை எரித்தான் என்னும் புராண வரலாறு காணப்படுகிறது.

"ஆலமர் கடவுளன்ன நின் செல்வம்"[௮]

என்ற புறநானூற்றுப் பாடல் வழி சிவப்பெருமான் பற்றிய செய்திகளைக் காண இயலுகின்றது. இவ்வரிகளின் வாயிலாகவும் தொல்காப்பியரின் திணைப்பகுப்பில் காணப்படும் தெய்வ முதன்மை இவற்றின் வாயிலாக சங்க காலத்தில் இருந்த பெருந்தெய்வ வழிபாடு அறியப்படுகிறது. இந்து மதக்கடவுளாகிய சிவன், திருமால் போன்ற தெய்வங்கள் பெருந்தெய்வங்களாகக் கருதப்படுகின்றன.

**சிறுதெய்வம் – விளக்கம்**

சிறுதெய்வங்கள் பாமரமக்களின் வாழ்வில் சிறந்த இடத்தைப் பெறுகின்றன. பண்டைய மரபு காரணமாகவும், சில நன்மைகளின் காரணமாகவும் சிறுதெய்வங்கள் நாட்டுப்புற மக்களால் வணங்கப்படுகின்றன.

பெருந்தெய்வ வழிபாடு மிகுதியான இடங்களில் பரவி, செல்வாக்குப் பெற்றிருந்தாலும் சிறுதெய்வ வழிபாடு மக்களிடம் சிறப்புப் பெற்று இன்றும் வழக்கில் உள்ளது.

ஐயனார், முனியன், வீரன், கருப்பசாமி, மதுரைவீரன், காத்தவராயன், பெரியாண்டவர், மாரியம்மன், காளியம்மன், பிடாரி, அங்காளம்மன், முத்தாலம்மன் போன்ற தெய்வங்கள் சிறுதெய்வமாக வணங்கப்படுகின்றன.

சிறுதெய்வ வழிபாடு என்பது நாட்டார் தெய்வங்களை வழிபடும் முறையாகும். "தெய்வ வழிபாட்டிற்குக் காரணம் அச்சமும், அன்பும். கலைக்களஞ்சியம் கூறுவது போன்று, ஆதிகுடிகள் இயற்கையில் காணும் தீ, இடி, பெருமழை, பூகம்பம் போன்ற அச்சந்தரும் நிகழ்ச்சிகளுக்கும் நோய்களும் காரணம் உலகின்கண் உலவும் கணக்கற்ற ஆவிகளே என்று நம்பியிருந்தனர். அந்த ஆவிகளின் சினத்தைத் தணிக்க அவற்றைத் தேவதைகளாகக் கொண்டு வழிபட்டனர்."[௯]

"சிறு தெய்வ வழிபாடு திட்டவட்டமான வரையறை இல்லாதது"[௧௦]

இவ்வழிபாட்டு முறைகள் மரபாகப் பின்பற்றப்படுவதை,

"நாட்டுப்புறத் தெய்வ வழிபாடெல்லாம் முன்னோர் வழிபட்ட வழியே நடைபெறுகிறது"[௧௧]

**இயற்கையைக் கடவுளாக வழிபடுதல்**

"இயற்கையின் ஆற்றலைக்கண்டு அஞ்சிய மனிதன் வழிபடுவதன் மூலம் அதன் சீற்றத்திற்கு ஆளாகாமல் இருக்கலாம் என்று நம்பினான். அதன் அடிப்படையில் தான் இயற்கை வழிபாடுகளும் விழாக்களும் தோற்றம் பெற்றன. பண்டிகைகளும் பலிகளும் ஆற்றுவதன் மூலம் இயற்கையினை வயப்படுத்திடலாம் என்ற எண்ணத்தில் விழாக்களும் கொண்டாட்டங்களும் தோன்றின. உளவியல் பேரறிஞர் சிக்மண்ட் பிராய்டு அவர்கள் இயற்கையிடமும் மரணத்திற்குப் பின்வரும் நிலையிடமும் மனிதன் கொண்ட அச்சமே வழிபாட்டிற்கு அடிப்படைக் காரணம் என்று கூறுகின்றனர்."[௧௨]

௧. "ஊர்த் தெய்வங்கள்

௨. இனத் தெய்வங்கள்

௩. குலத் தெய்வங்கள்

௪. மாலைத் தெய்வங்கள்

௫. சமாதித் தெய்வங்கள்

௬. துணைத் தெய்வங்கள்"[௧௩]

என ஆறுவகையாகப் பகுக்கிறார் டாக்டர் துளசி இராமசாமி.

வேலூரிலுள்ள முனீஸ்வரன் கோயிலில் நோய் தீர்ந்தவர்களைப் பச்சை ஓலைப் பாடையில் ஏற்றிக் கோயிலைச் சுற்றி இழுத்து வந்து செடல் குத்தி வேண்டுதலை நிறைவேற்றுவர்.

மழை – பொதுமக்கள் யாவருக்கும் இன்றியமையாத தேவைகளில் தலையாது. எனினும் வேளாண்தொழிலுக்கு இதுவே மூலமாதலின் வேளாண்மைத் தொழில் புரிவோரே இவ்வாறு வழிபாட்டில் ஈடுபடுகின்றனர். மழை பொய்க்குமானால் அம்மன் ஆலயத்தின் முன் "கெங்கையம்மன் கூத்து"[௧௪] நடத்துதல் இன்றைக்கும் வழக்கிலுண்டு.

**கொலையில் உதித்த தெய்வங்கள்**

நாட்டார் வழிபடும் பல தெய்வங்கள் கொலையில் உதித்தவை. மாடன் முதலிய தெய்வங்கள் போரிலோ, கலகத்திலோ, அல்லது சதிக்குள்ளாகியோ உயிர் விட்டவர்களே. "மாடன் கதைகள் கொல்லப்பட்ட வீரர்களின் கதைகளே. களவாடவோ, கலப்புச்சாதி மணம் காரணமாகவோ, புதையல் எடுக்கவோ, வேறு சமுதாயக் காரணமாகவோ கொலைகள் நடக்கலாம். இக்கதைகளில் எல்லாம் கொலை செய்யப்பட்டவன் பேயாகிக் கொலை செய்தவனை மட்டுமல்லாமல் அவனுடைய உறவினர்களை எல்லாம் கொன்று விடுவான். பழி வாங்குதல் இரண்டு மூன்று பிறவிகளில் கூடத் தொடரலாம். உதாரணமாக நீலி கதையில் ஒரு பிறவியில் நடந்த கொலைக்கு அடுத்த பிறவியல் பழிவாங்கப்படுகிறது. பிச்சைக்காலன் கதையில் கொலை செய்யப்பட்டவனது தங்கை, கொலை செய்யத் தூண்டியவனது ஆசை நாயகி, கொலை செய்யத் தூண்டியவனை அவளே கொல்கிறாள். தானும் தற்கொலை செய்துகொள்கிறான். அண்ணனும் தங்கையும் பேய்களாகிக் கொலை செய்தவர்களைக் கொல்கிறார்கள். மானிட உருவில் பழி தீர்க்க முடியாதாயின் இறந்தவர்கள் பேய்களாகிப் பழிதீர்த்துக்கொள்கிறார்கள்."[௧௫]

"மாடன் போன்ற தெய்வங்கள் சில குடும்பங்களுக்கு குல தெய்வமாக இருக்கும். ஒன்று தெய்வமாகக் கருதப்படுகிறது. அம்மனிதனது வழிவந்தவர்களுக்கு அவன் குலதெய்வமாக இருக்கலாம். அல்லது அவனைக் கொன்றவர்களுக்குக் குலதெய்வமாக இருக்கலாம். இவை யாவும் பயத்தினால் வணங்கப்படும் தெய்வங்களே."[௧௬]

காத்தவராயன், மதுரைவீரன், சின்ன நாடான் என்ற குமாரசாமி, கௌதலமாடன் போன்றோர் சாதிமுறைச் சட்டங்களை எதிர்த்ததால் கொல்லப்பட்டோர் முத்துப்பாட்டன் தாழ்த்தப்பட்ட சக்கிலியர் பெண்டிரை மணந்துகொண்டாலும், ஆநிரை மீட்கச் சென்று கொல்லப்பட்டவன். இவர்கள் சாதிக்குள் மணம் புரிய வேண்டும் என்ற சமுதயாச் சட்டத்தை மீறியோர்.

**உருவ அமைப்பு**

சிறுதெய்வங்கள் பலவற்றிற்கும் வழிபாட்டின் போது மட்டுமே புதிதாக உருவ வடிவங்கள் செய்யப்படுகின்றன. வழிபாடு முடிந்த நிலையில் அவற்றைச் சிதைத்துவிடும் வழக்கம் பல சிறுதெய்வக் கோயில்களில் காணப்படுகின்றது.

அம்மன் கோயில்களில் 'சக்திக்கரகமே' தெய்வ உருவமாகக் கருதி வழிபடப்படுகிறது. சிறு தெய்வங்களின் பெயரை மட்டுமெ நினைவில் கொள்ள முடியுமே தவிர அந்தத் தெய்வங்களுக்கான உருவங்களைக் கற்பனைகூடச் செய்து பார்க்க முடியாது. அதையும் தாண்டி சிறுதெய்வங்களுக்குச் சிலையெடுக்கப்பட்டிருந்தால் அவை பிரமாண்டமான உருவங்களைக் கொண்டிருக்கும் திறந்த வெளியில் குதிரையும் குதிரையின் மீது அமர்ந்திருக்கும் தெய்வமும் தனித்து நின்றோ, அமர்ந்தோ இருக்கும்.

**சூல் நாவலில் சிறுதெய்வ வழிபாடு**

மடைக்குடும்பன், கட்டக்கருப்பன், மாதாயி, கள்ளன்.

**மடைக்குடும்பன் கட்டக்கருப்பன்**

அந்தக் காலத்தில் நீர்ப்பாய்ச்சி என்ற பெயர் கிடையாது. மடைக்குடும்பன் என்றுதான் சொல்வார்கள். மடைக்குடும்பன் கட்டக்கருப்பன் பரம்பரை பரம்பரையாய் மடையைப் பராமரித்து நீர் பங்கீடு செய்து, வருடக் கூலி வாங்கி கண்டமாய் காவல் காத்து வரும் வாரிசு.

நடுமடையில் தண்ணீர் வராமல் மடைவாய் அடைத்துக்கொண்டது. இரண்டு நாட்களாக கருப்பன் என்னென்னவோ செய்து பார்த்தும் அடைப்பை எடுக்க முடியவில்லை.

ஊர்க்கூடி தூத்துக்குடிக்குப் போய் முத்துக் குளிப்பவர்கள் இரண்டு பேரை அழைத்துவந்து முயங்க வைப்பதென்று முடிவு எடுத்துவிட்டார்கள். தன்டைக்குடும்ப தொழிலுக்கே இழுக்கு வந்துவிட்டதை எண்ணி மறுகினான்.

கருப்பன் அய்யனாரப்பன் முன்னால் விழுந்து வேண்டினான். அப்போது ஒரு ஒலி சத்தம் கேட்டது. என்னால் தனியாக காவல் காக்க இயலவில்லை. என்னருகில் உன்னை வைத்துக்கொள்ளப் பிரியப்படுகிறேன் என்று கூறியது.

"மண்வெட்டி கொண்டு
மடை திறக்கப்ணுபோறசாமி
மடையைத் திறந்துவிடு
மஞ்சநீர் ஆடிவாரேன்"[௧௨]

காலையில் மடைத்திறக்கப் போவதாக ஊர் மக்கள் அனைவரிடமும் கூறினான். ஊர்க்கூடி நிற்க மடையின் மேல்யேறி மடைக்குள் பாய்ந்து மறைந்து போனான். பின்னர் தண்ணீர் வருவதைப் பார்த்து ஊர் மக்கள் ஆரவாரக்கூச்சல் போட்டார்கள். சந்தோஷக் களப்பில் கூட்டம் மடைக்குடும்பன் கருப்பனை மறந்து போனது.

மடைக்குடும்பன் “உசுரக் குடுத்து ஊர்ப் பசிய வெரட்டினான்”[௧௮] என்று மடைக்குடும்பன் கருப்பனை அய்யனாரப்பனின் அருகிலேயே சிலையாகிப் போனான். கருப்பனின் முன்னால் வருடம் தவறாமல் பொங்கல் பானைகள் பொங்கி வழிகின்றன. அய்யனாரப்பனின் அருகாமையும் கருப்பன் காவல் தெய்வமாக மாறிப்போனான்.

**சூல் நாவலில் வழிபாட்டு முறைகள்**

பழங்காலத்திலிருந்தே பெண் தெய்வ வழிபாடு உலகில் பல இன மக்களிடையேயும் பரவலாக இருந்து வரும் ஒன்றாகும். பெண் தெய்வங்களைத் தாய்த்தெய்வம் எனத் தமிழிலக்கியங்கள் கூறுவதை அறியலாம். பழந்தமிழரின் தெய்வம் கொற்றவை என வழங்கப்பட்டுள்ளது.

பெண் தெய்வங்களை நீர் நிலைகளை அடுத்து காடுகளிலும் வைத்து வழிபட்டமை பழங்காலந்தொட்டு இருந்து வரும் பழக்கமாகும். இதனை,

“கடல்கெழு செல்வி கரை நின்றாங்கு
நீயே கானம் ஒழிய யானை”[௧௯]

என்ற பாடலால் அறிகிறோம்.

சோ. தர்மனின் நாவல்களிலும் பெண் தெய்வ வழிபாட்டைப் பற்றி கூறுகின்றன.

**நாவலில் சிறுதெய்வ வழிபாடுகள்**

பெரும்பாலும் கிராமப்புறங்களில் சிறுதெய்வ வழிபாடே முதன்மையாய் உள்ளது. ஆண்டிற்கு ஒருமுறை குலதெய்வ வழிபாடு என்றும், பய உணர்வு தோன்றும் போதெல்லாம் காவல் தெய்வ வழிபாடு என்றும், இறந்தோரை வணங்கிட மாதம் ஒருமுறை அமாவாசை வழிபாடு என்றும், மக்கள் சிறு தெய்வ வழிபாட்டினை சிற்சில மாறுதல்களோடு செய்து வருகின்றனர். அவ்வகையில் சூல் நாவலிலும் ஆசிரியர் தர்மன் அவர்கள் சிறு தெய்வங்களைப் பற்றியும் அவைகள் உருவான விதத்தோடு அவற்றை வழிபடுவதனையும் ஆங்காங்கே எடுத்துரைக்கின்றார்.

**மாதாயி**

சோ. தர்மன் படைப்பில் மாதாயி என்னும் சிறுதெய்வ வழிபாட்டை பற்றி குறிப்பிடுகிறார். இந்த மாதாயியானவள் தன்னுடைய கற்பை சந்தேகப்பட்டும் கேவளமாக பேசிய காரணத்தால் தன் கற்பு கெட காரணமாக இருந்த கருப்பன் என்பவனைக் கொன்றுவிடுகிறாள்.

பிறகு தனது வயிற்றில் வளர்ந்த அவனது குழந்தையை தானே வயிற்றை கிழித்து வெளியில் எடுத்து அவனது மீது தூக்கி எரிகிறாள். தன் உயிரையும் தியாகம் செய்து தன் கற்பின் தூய தன்மையை நிரூபிக்கிறாள். இதனைக் கண்டு அந்த ஊர் மக்கள் அவளை தெய்வமாக வணங்குகின்றன.

மாதாயி தன் சிசுவை அவமானமாய்க் கருதினாள். “உருவிய சேலையில் உருக்கொண்டதுதானே குருஷேத்திரம், உடைத்த சிலம்பும் விரித்த கூந்தலும் அக்னியாய் உருமாறி மதுரையைப் பஸ்பமாக்கியது அவமானத்தின் சீற்றம் தானே.”[௨௦] மாதாயியும் அவளது சினத்தின் சீற்றம் தனிய உயிர் தியாகம் செய்கிறாள். பிறகு உளியை நட்டுவைத்த கற்சிலை, சுமை தாங்கிய நிறைசூலியாய் மாதாயி, தவழும் குழந்தையாய் ஒரு சிசுவின் உருவம், மாதாயி குழந்தை வரம் தருகிறாள். கன்னிப்பெண்கள் தாலியில்லாமல் கருத்தரித்து விடக்கூடாதென்று கேட்டவுடன் தாலி தருகிறாள். கர்ப்பிணிப் பெண்களைக் காத்தருள்கிறாள். மனிதர்களின் சூலுக்கு மட்டும் மாதாயி காவலிருக்கவில்லை. கால்நடைகளின் சூல்கள் அத்தனைக்கும் மாதாயி காவல் இருக்கிறாள். தெய்வக் குழந்தையைக் காண தினம் தினம் பக்தர்கள் கூடுகிறார்கள்.

**கள்ளன்**

ஒரு இளவட்டம் குடிக்க தண்ணீர் கேட்டான். குமராண்டிப் பகடையின் பெண்டாட்டி மாரி கொண்டு வந்துக் கொடுத்தாள். பின்னாலிருந்து கட்டிப்பிடித்து வாயைப் பொத்தினான் இளவட்டம். உடனே மாரி கத்தினாள் ஊர் கூடி அவனை துரத்தியது. அவன் கரை வழியாக சென்றாள் பிடித்து விடுவார்கள் என்று கண்மாய்க்குள் குதித்தான். கரையேற முடியாமல் இறந்து விட்டான். ஊர் கூடிநிற்க குமராண்டிப் பகடையின் மருமகள் இருளி ஆடிக்கொண்டு இருந்தாள். அவளை யார் என்று கேட்க நான் கள்ளன் என்றாள்.

“கண்மாய்க்குள்ள மூச்சு முட்டி கையோஞ்சு, காலோஞ்சுஈ, வயிறுமுட்ட தண்ணியக்குடிச்சு எப்பிடிச் செத்தனோ அதே மாதிரி ஒவ்வொரு பொம்பளையும் நெற சூலியாவே சாவா. புள்ளத்தாச்சியா ஆகவிடமாட்டான். அபாண்டமா வீண் பழியச் சொமத்தி என்னயச் சாகடிச்ச ஒங்க தெருவ கருவறுப்பண்டா. “தெரியாம செஞ்ச குத்தத்துக்கு எல்லாச் சாமியும் இப்படி பழிவாங்க ஆரம்பிச்சிட்டா, மனுஷங்க எப்பிடி சாமி உசுர் வாழ்றது? நான் சாமி இல்லடா, பேய்டா. நான் பேய்டா ஒங்கள கருவறுக்க வந்த கள்ளன் பேய்டா.”[௨௧]

எங்களப் பொறுத்தவர சாமியும் ஒன்னுதான் பேயும் ஒன்னுதான். நாங்க பேய்க்கும் பயப்படுவம், சாமிக்கும் பயப்படுவம், பேயவும் கும்பிடுவம், சாமியவும் கும்பிடுவம் என்று அவ்வூர் மக்கள் கூறுகின்றனர். அத்தகைய வழக்காற்றின் அடிப்படையில், “அப்படின்னா என்னையவும் கும்பிடுவீகளாடா? ‘சத்தியமா கும்புடுறம்சாமி’, சொல்றத கவனமா கேளுங்கடா. ஒங்க குலதெய்வம் உளிக்கருப்பன் கோயிலுக்குள்ள எனக்கும் சிலை வைக்கனும், என்னைய கள்ளன் சாமினு பேரு விளம்பி கும்பிடனும், உளிக் கருப்பனுக்கு கொட நடத்தும் போது எனக்கும் சேர்த்து நடத்தனும், சம்மதமா சொல்லுங்கடா”[௨௨] “குழுச்சம்மதம் சாமி அடுத்த வருஷமே சிலைவச்சு கொட குடுத்து கும்புடுறோம் சாமி”[௨௩] என்று ஊர் மக்கள் கூறுகின்றனர். அத்தகைய வழக்காற்றின் அடிப்படையில் பட்டினப்பாலையில், “பிணம் தீங்யாக்கை பேய்மகள் துவன்றும்”[௨௪] என்ற வரியில் அக்காலத்தில் பேயின் வழிபாடு இருந்ததை உணர்த்தி நிற்கிறது.

**முடிவுரை**

நாட்டுப்புறத் தெய்வங்கள் மக்கள் பண்பாட்டோடு ஒட்டி உறவாடுபவையாகவும், மக்களின் வாழ்வியலின் அங்கமாக இருப்பவையாகவும் குறிப்பிட்ட வட்டாரத்தை தெரிந்துகொள்ளவோ, அவ்வட்டார மக்களை இனங்கானவோ அடையாளமாக இருப்பவை நாட்டுப்புறத் தெய்வங்களேயாகும்.

இயற்கையையும், ஊரின் நன்மைக்காக உயிர் விட்டவர்களையும், பயத்தின் காரணமாகவும் அவர்கள் வழிப்பட்டு வருகின்றன. அவர்களுக்கு உருவ அமைப்பு கொடுத்து அவர்களை வழிபட்டு வருகின்றனர் என்பதை சோ. தர்மன் சூல் நாவல் மூலம் அறியலாம்.

**மேற்கோள்கள்**


௧. தொல்.பொருள்.அகம். நூ. ௫.

௨. தொல்.புறம். நூ. ௫.

௩. திருக்குறள். ௭௭௧.

௪. தொல்.அகம். நூ. ௧0௯.

௫. தொல்.புறம். நூ. ௩.

௬. பரிபாடல், வரி. ௨௫-௨௭.

௭. புறநானூறு, பா. ௧௯௪.

௮. சு. சண்முகசுந்தரம், நாட்டுப்புறவியல், ப. ௧௬0.

௯. ஆறு. இராமநாதன், நாட்டுப்புறப்பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல், ப. ௨0௮.

௧0. துளசி. இராமசாமி, நெல்லை மாவட்ட நாட்டுப்புறத் தெய்வங்கள், ப. ௧௫௪.

௧௧. அ. அறிவுநம்பி, நாட்டுப்புற களங்கள், ப. ௮௪.

௧௨. சு. சண்முகசுந்தரம், நாட்டுப்புறவியல், ப. ௧௬௧.

௧௩. அ. அறிவுநம்பி, நாட்டுப்புற களங்கள், ப. ௪௫.

௧௪. தே. லூர்து, நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், ப. ௩௪௧.

௧௫. மேலது., ப. ௩௪௧.

௧௬. மு. அண்ணாமலை, நமது பண்பாட்டில் நாட்டுப்புற இலக்கியம், ப. ௪௧0.

௧௭. சோ. தர்மன், சூல், ப. ௫௪.

௧௮. அகநானூறு, பா. ௩௭0:௧௨-௧௩.

௧௯. சோ. தர்மன், சூல், ப. ௧௬0.

௨0. மேலது., ப. ௭௧.

௨௧. மேலது., ப. ௭௨.

௨௨. மேலது., ப. ௭௨.

௨௩. பட்டினப்பாலை, வரி. ௨௬0.


**துணைநின்ற நூல்கள்**


௧. டாக்டர் துளசி. இராமசாமி, நெல்லை மாவட்ட நாட்டுப்புறத் தெய்வங்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், டி.டி.டி.ஐ. அஞ்சல், தரமணி, சென்னை-௬00 ௧௧௩.

௨. புலவர் கருப்பூர் மு. அண்ணாமலை, நமது பண்பாட்டில் நாட்டுப்புற இலக்கியம், மருதலையான் பதிப்பகம், சென்னை.

௩. தே. லூர்து, நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், தூய சவேரியர் (தன்னாட்சி) கல்லூரி, பாளையங்கோட்டை-௬௨௭ 00௨.

௪. ஆறு.இ. இராமநாதன், தமிழர் வழிபாட்டு மரபுகள் நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டு ஆய்வு, மெய்யப்பன் பதிப்பகம், ௫௩, புதுத்தெரு, சிதம்பரம்-௬0௮ 00௧.

௫. சோ. தர்மன், சூல், அடையாளம் வெளியீடு, ௧௨0௫/௧ கருப்பூர் சாலை, புத்தாநத்தம்-௬௨௧ ௩௧0, முதற்பதிப்பு-௨0௧௬.